இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
செவ்வாய்க்கிழமை 16.12.2025

# வாகை சூடிய வடக்கு மண்டல சந்திப்பு!

திராவிட முன்னேற்றக் கழக இளைஞர் அணியின் சார்பில் திருவண்ணாமலையில் நடத்தப்பட்ட வடக்கு மண்டல நிர்வாகிகள் சந்திப்பு, வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வாக நடைபெற்றுள்ளது. ஒரு இயக்கம் தங்களோடு இணைத்துக் கொள்ளும் படைவீரர்களுக்கு எத்தகைய பயிற்சியை அளிக்க வேண்டும் என்பதற்கு எடுத்துக்காட்டாகச் சுட்டிக் காட்டும் சந்திப்பாக திருவண்ணாமலைச் சந்திப்பு நிகழ்ந்துள்ளது.

**“இன்று பல கட்சிகள், இயக்கங்கள் உறுப்பினர்கள் சேர்க்கவே தடுமாறிக் கொண்டிருக்கும்போது, இன்று திராவிட முன்னேற்றக் கழகத்தின் நம் இளைஞர் அணி ஒவ்வொரு பூத் வரையிலும் நிர்வாகிகளை நியமனம் செய்திருக்கிறது. அந்த வகையில், இன்று 91 சட்டமன்றத் தொகுதிகளில் மாவட்டம், மாநகரம், ஒன்றியம், நகரம் முதல் பாகம் வரை, பூத் வரையிலும் அமைப்பாளர், துணை அமைப்பாளர் என ஒரு லட்சத்து 30 ஆயிரம் நிர்வாகிகள் இந்தச் சந்திப்புக்கு நீங்கள் வருகை தந்திருக்கிறீர்கள்”** என்று இளைஞரணிச் செயலாளர் – மாண்புமிகு துணை முதலமைச்சர் உதயநிதி அவர்கள் குறிப்பிட்டார்கள். இந்த இலட்சக்கணக்கானவர்களும் இலட்சிய வேங்கைகளாக இருப்பது தான் சிறப்பாகும்.

**திராவிட முன்னேற்றக் கழகம் தேர்தலுக்காகத் தொடங்கப்பட்ட இயக்கமல்ல; கொள்கைக்காகத் தொடங்கப்பட்ட இயக்கம். அக்கொள்கையை வென்றெடுக்கப் போராடிய இயக்கம். வாதாடிய இயக்கம். போராட்டங்களின் வெற்றியானது ஆட்சி அதிகாரத்தின் கையில்தான் இருக்கிறது என்பதை உணர்ந்த பிறகுதான் தேர்தல் களத்தில் இறங்கியது கழகம். ‘யாரையோ செய்யச் சொல்வதை விட, நாமே செய்து காட்டுவது’ என்ற முடிவுக்கு பேரறிஞர் அண்ணாவும், அவரது தம்பிமார்களும் வந்தார்கள். அதன் பிறகுதான் தேர்தலில் போட்டியிடலாம் என்ற முடிவையே கழகம் எடுத்தது.**

1967 ஆம் ஆண்டு முதல் அமைக்கப்பட்ட திராவிட முன்னேற்றக் கழக அரசானது, தனது திராவிடத் தமிழியல் கொள்கையை செயல்படுத்திக் காட்டும் அரசாகவே செயல்பட்டு வருகின்றது. ஆறாவது முறையாகக் கழகத்தை ஆட்சியில் அமர வைத்த மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்கள், தனது அரசுக்கு ‘திராவிட மாடல் அரசு’ என்று பெயர் சூட்டி கொள்கைப் பூர்வமான ஆட்சியை நடத்தி வருகிறார். ‘இது ஒரு கட்சியின் அரசல்ல, இனத்தின் அரசு’ என்று அறிவித்திருக்கிறார்.

அதேநேரத்தில் திராவிட முன்னேற்றக் கழகம் என்ற கொள்கைப் பாசறைக்குத் தேவையான படைவீரர்களைத் தயாரித்து வருகிறார் இளைஞர் அணிச் செயலாளர், மாண்புமிகு துணை முதலமைச்சர் உதயநிதி அவர்கள்.

**இளைஞரணிச் செயலாளராக மாண்புமிகு உதயநிதி அவர்கள் ஆனது முதல் இலட்சக்கணக்கான இளைஞர்களைக் கழகத்துக்குள் கொண்டு வந்து சேர்த்தார். அப்படிச் சேர்ந்த இளைஞர்களுக்கு கொள்கைப் பாசறை பயிற்சி முகாம்களை நடத்தினார். பாசறைக் கூட்டங்களை நடத்தினார். ‘முரசொலி’யின் கடைசிப் பக்கத்தை பாசறை பக்கமாக வடித்தார். கொள்கைகளைப் பரப்ப முத்தமிழறிஞர் பதிப்பகம் தொடங்கினார்.**

**பல்வேறு புத்தகங்களை ஆண்டு தோறும் வெளியிட்டு வருகிறார். தொகுதி தோறும் கலைஞர் நூலகங்களை திறந்து வைக்கிறார். இளம் பேச்சாளர்களை உருவாக்கினார். இளம் எழுத்தாளர்கள், ஆராய்ச்சியாளர்கள், பத்திரிக்கையாளர்களை உருவாக்கி வருகிறார். அறிவுத் திருவிழாவை நடத்தினார். கலைஞரின் கொள்கைப் பேரன் என்பதை செயலால் நிரூபித்து வருகிறார்.**

**இந்த வரிசையில் வடக்கு மண்டலத்துக்கு உட்பட்ட நிர்வாகிகள் சந்திப்பை நடத்தி இருக்கிறார். 1.50 இலட்சம் நிர்வாகிகள் கூடிய இச்சந்திப்பானது வடக்கு மண்டல மாநாட்டைப் போல நடைபெற்றுள்ளது. மாண்புமிகு அமைச்சர் எ.வ.வேலுவின் முன்னெடுப்பில் நடைபெற்றுள்ள இந்தப் பிரமாண்டமான மாநாடு, ஒரு மாநாடு எப்படி நடக்க வேண்டும் என்பதற்கான நேரடிப் பயிற்சி மாநாட்டைப் போல நடைபெற்றுள்ளது. பேச்சு மட்டுமல்ல; செயலும் எவ்வளவு சரியாக இருக்க வேண்டும் என்பதை ஊருக்கு உணர்த்திவிட்டது இந்த மாநாடு.**

**‘கடமை, கண்ணியம், கட்டுப்பாடு’ என்று பேரறிஞர் அண்ணா வகுத்துத் தந்த அதே பண்பாட்டுக்கு உதாரணமாக இந்த மாநாட்டை நடத்திக் காட்டி இருக்கிறார் மாண்புமிகு உதயநிதி அவர்கள். அவரே சொன்னது போல, ‘இளைஞர்களை கட்டுப்படுத்த முடியாது என்று சொல்வார்கள், அது தவறானது, இங்கே பாருங்கள் எங்கள் இளைஞர்கள் எத்தகைய கட்டுக்கோப்புடன் இருக்கிறார்கள்’ என்பதை பெருமையுடனும் பெருமிதத்துடனும் உணர்த்துவதாக இச்சந்திப்பு இருந்தது.**

‘இயக்கத்துக்குள் எத்தனை பேர் சேர்ந்தார்கள் என்ற எண்ணிக்கையை விட, அவர்களை கொள்கை வீரர்களாக மாற்ற வேண்டும் என்ற எண்ணமே முக்கியமானது’ என்று கழகத் தலைவர், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒருமுறை சொன்னார்கள். ‘நமக்குத் தேவை உறுப்பினர்கள் அல்ல, கொள்கைவாதிகள்’ என்று குறிப்பிட்டார். அத்தகைய கொள்கைவாதிகளை உருவாக்கி வருகிறார் மாண்புமிகு உதயநிதி அவர்கள். இக்கொள்கை வீரர்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் இட்ட கட்டளை என்பது மிக மிக முக்கியமானது.

**“2026 தேர்தலில், மக்கள் முன்னால் இருக்கும் கேள்வி என்ன என்றால், ‘இன்னும் ஐம்பது ஆண்டுகள் முன்னோக்கி நடைபோடப் போகிறோமா? இல்லை. ஆயிரம் ஆண்டுகள் பின்னோக்கி இழுக்க முயற்சி செய்பவர்களுக்கு அடிபணியப் போகிறோமா?’**

**அந்தக் கேள்விக்கு மக்கள் அளிக்கப் போகும் விடை: ‘திராவிட மாடல் ஆட்சி 2.0’. அதற்கு நீங்கள் எல்லோரும் கடுமையாக உழைக்க வேண்டும்! ஏன் என்றால், திராவிட முன்னேற்றக் கழகத்தின் எதிர்காலத்தில்தான், தமிழ்நாட்டின் எதிர்காலம், தமிழினத்தின் எதிர்காலம் அடங்கியிருக்கிறது! அந்த எதிர்காலம், வளம் நிறைந்ததாக, ஒளி நிறைந்ததாக தமிழ்நாடு நம்பர் ஒன் என்று சிங்க நடைபோடுவதாக அமைய வேண்டும்!”** என்று தெளிவாக வழிகாட்டி இருக்கிறார் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**திராவிட முன்னேற்றக் கழகத்தின் அனைத்து முன்னெடுப்புகளுக்கும் கட்டியம் கூறும் மாநாடாக திருவண்ணாமலை சந்திப்பு அமைந்துவிட்டது.**




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (15.12.2025) சென்னை, திருவாவடுதுறை டி.என். ராஜரத்தினம் கலையரங்கில் நடைபெற்ற முத்தமிழ்ப் பேரவையின் இசை விழாவில் கலந்து கொண்டு கலைஞர் விருதினை நடிகர் எம்.நாசர், ராஜரத்னா விருதினை வடுவூர் எஸ்.என்.ஆர். கிருஷ்ணமூர்த்தி இயல்செல்வம் விருதினை திருவாரூர் புலவர் இரெ. சண்முகவடிவேலன், இசைச்செல்வம் விருதினை திருமதி காயத்திரி வேங்கடராகவன், நாட்டியச்செல்வம் விருதினை திருமதி அனிதாகுஹா, நாதஸ்வரச்செல்வம் விருதினை திருமெய்ஞானம் சகோதரர்கள் – டி.கே.ஆர். ஐயப்பன், டி.கே.ஆர். மீனாட்சிசுந்தரம், தவில்செல்வம் விருதினை நாங்கூர் என்.கே. செல்வகணபதி, மிருதங்கச்செல்வம் விருதினை தஞ்சாவூர் கே. முருகபூபதி ஆகியோருக்கு வழங்கி சிறப்பித்தார். இவ்விழாவில், அமைச்சர் மா.சுப்பிரமணியன், சட்டமன்ற உறுப்பினர்கள் த.வேலு, ஜெ.கருணாநிதி, நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் டி.கே.எஸ். இளங்கோவன், வாரியத் தலைவர்கள் பூச்சி எஸ். முருகன், துறைமுகம் காஜா, திண்டுக்கல் ஐ. லியோனி, முத்தமிழ்ப் பேரவையின் செயலாளர் பி.அமிர்தம், தலைவர் ஜி.ராமானுஜம், துணைத் தலைவர் குணாநிதி அமிர்தம், டாக்டர் சீர்காழி கோ. சிவசிதம்பரம், முத்தமிழ்ப் பேரவை அறக்கட்டளையின் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கான ‘கலைஞர் விளையாட்டு உபகரணங்கள்’ வழங்கும் விழா:

# விளையாட்டு வீரர்களின் திறமையை ஊக்குவிப்பதே ‘கலைஞர் ஸ்போர்ட்ஸ் கிட்’ திட்டத்தின் நோக்கம்!

## சென்னையில் நடைபெற்ற விழாவில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் உரை!

**சென்னை,டிச.16–**

**சென்னை, நேரு உள் விளையாட்டரங்கில் நடைபெற்ற விழாவில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கலந்துகொண்டு, சென்னை, திருவள்ளூர், திருப்பூர், கோவை மாவட்ட நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கான கலைஞர் விளையாட்டு உபகரணங்களை வழங்கினார்.**

**விழாவில், விளையாட்டு உபகரணங்களைப் பெற்ற அத்தனை நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகளையும், மாணவர்கள் – இளைஞர்களையும் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வாழ்த்தி பேசினார்.**

**அப்போது அவர் “திறமையான விளையாட்டு வீரர்களையெல்லாம் தேடி கண்டறிந்து, அவர்களின் திறமையைக் கண்டுபிடித்து, அவர்களை விளையாட்டில் ஊக்குவிக்க வேண்டும் என்பதுதான் கலைஞர் ஸ்போர்ட்ஸ் கிட் திட்டத்தின் ஒரே நோக்கம்” என்று அவர் குறிப்பிட்டார்.**

**துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆற்றிய வாழ்த்துரை வருமாறு:**

*மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின் பேரில், தமிழ்நாடு முழுவதும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு கலைஞர் ஸ்போர்ட் கிட்ஸ் வழங்கி வருகிறோம். அந்த வகையில் இன்றைக்கு, சென்னை, கோயம்புத்தூர், திருவள்ளூர், திருப்பூர் ஆகிய மாவட்டங்களில் உள்ள அனைத்து உள்ளாட்சி அமைப்புகளுக்கும் கலைஞர் விளையாட்டு உபகரணங்களை கொடுக்க இருக்கிறோம்.*

### திறமையான விளையாட்டு வீரர்கள்

*தமிழ்நாட்டின் ஒவ்வொரு மூலை முடுக்கிலிருந்தும் திறமையான விளையாட்டு வீரர்கள் உருவாக வேண்டும் என்பதுதான் முதலமைச்சரின் ஒரே நோக்கம், நம்முடைய அரசின் லட்சியம். கடந்த 2024-ஆம் ஆண்டு இந்தத் திட்டத்தை, முதலமைச்சர் அவர்கள் துவக்கி வைத்தார்கள். ஏற்கனவே அனைத்து கிராமங்களுக்கும் இந்த உபகரணங்கள் சென்றடைந்துள்ளன. கிட்டத்தட்ட 12 ஆயிரத்து 500 ஊராட்சிகளுக்கு சுமார் 85 கோடி ரூபாய் மதிப்பில் ஏற்கனவே இந்த உபகரணங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. அந்த திட்டத்தின் வெற்றியைத் தொடர்ந்து, நம்முடைய முதலமைச்சர் அவர்கள், நகர்ப்புறங்களிலும் கலைஞர் ஸ்போர்ட்ஸ் கிட் திட்டத்தைக் கொண்டு சேர்க்கவேண்டும் என்று எங்களுக்கு உத்தரவிட்டிருந்தார்.*

*கடந்த மாதம் செங்கல்பட்டு மாவட்டத்தில், இந்த திட்டத்தைத் துவங்கி வைத்தோம். இன்று, சென்னை, கோவை, திருப்பூர், திருவள்ளூர் மாவட்டங்களில் கிட்டத்தட்ட 3,100 விளையாட்டு உபகரணங்கள் விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகளிடம் வழங்கப்பட இருக்கின்றன.*

### விளையாட்டு மைதானம்

*கிராமப்புறங்களில் விளையாட்டு மைதானம் இருக்கும். ஆனால், சென்னை மாதிரியான பெரிய நகரங்களை பொருத்தவரை ஒவ்வொரு தெருவும், ஒவ்வொரு சந்தும்தான் நமக்கு மைதானம். இங்கு வந்து விளையாட்டு வீரர், வீராங்கனைகளைப் பார்க்கும்போது, எனக்கு என்னுடைய பள்ளி, கல்லூரி காலங்கள் நினைவுக்கு வருகின்றன. ஏனென்றால், விளையாடுவதற்கு மைதானம் இருக்காது. நம்முடைய தெருதான் நமக்கு மைதானம். கிரிக்கெட் விளையாடும்போது பந்து பக்கத்து வீட்டுக்குள் சென்று விழுந்துவிடும். கொடுப்பார்களா, கொடுக்க மாட்டார்களா என்று ஐந்து நிமிடம் காத்திருப்போம். இந்த அனுபவம், தெருவில் கிரிக்கெட் விளையாடுபவர்களுக்கு நிச்சயமாக இருக்கும். அப்படிப்பட்ட விளையாட்டு வீரர்களையெல்லாம் தேடி கண்டுபிடித்து, அவர்களின் திறமையைக் கண்டுபிடித்து, அவர்களை விளையாட்டில் ஊக்குவிக்க வேண்டும் என்பதுதான் கலைஞர் ஸ்போர்ட்ஸ் கிட் திட்டத்தின் ஒரே நோக்கம்.*

### 100 கோடி ரூபாய் பரிசுத்தொகை

*கடந்த நான்கரை வருடங்களில் நம்முடைய அரசு தமிழ்நாட்டில் ஏராளமான விளையாட்டுப் போட்டிகளை நடத்திக்கொண்டு இருக்கிறது. ஆண்டுதோறும் முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகளுக்காகவும் வெற்றி வீரர்களுக்காகவும் ஒவ்வொரு ஆண்டும் கிட்டத்தட்ட 100 கோடி ரூபாய் பரிசுத்தொகையாக நம் முதலமைச்சர் அவர்கள் வழங்குகிறார். சில நாட்களுக்கு முன்பு கூட, சர்வதேச ஜூனியர் ஹாக்கி உலக கோப்பை போட்டியை, சென்னையிலும், மதுரையிலும் நடத்தினோம். நேற்று உலகக் கோப்பை ஸ்குவாஷ் போட்டி சென்னையில் நடந்து முடிந்துள்ளது. அதில் இந்திய அணி முதன்முறையாக தங்கப் பதக்கத்தை வென்றுள்ளார்கள். இன்று காலை அவர்களை வரவழைத்து, முதலமைச்சர் அவர்கள், அவரின் பாராட்டைத் தெரிவித்தார்கள்.*



*தமிழ்நாட்டு வீரர்கள், பல தேசிய, சர்வதேசப் போட்டிகளில் பல சாதனைகளைச் செய்து வருகிறார்கள். இந்த சாதனைகள் இன்னும் அதிகமாக வேண்டும் என்றுதான் நம் அரசு தொடர்ந்து பல முன்னெடுப்புகளைச் செய்து வருகிறது.*

*குறிப்பாக, நம்முடைய விளையாட்டு வீரர்கள் வெளிநாடுகளுக்குச் சென்று விளையாட தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளையை முதலமைச்சர் அவர்கள் மூன்று வருடங்களுக்கு முன்பு ஆரம்பித்தார். அதன் மூலமாக நிதி உதவிகளைச் செய்கிறோம். வெற்றிபெற்று திரும்பி வரும் போது, அதைப் பாராட்டி, நம்முடைய அரசு சார்பில், உயரிய ஊக்கத் தொகையை நம் முதலமைச்சர் அவர்கள் கொடுக்கிறார்கள். விளையாட்டு வீரர்கள் இங்கிருந்து சென்று கலந்துகொள்வதற்கு உதவி செய்வதுதான் தமிழ்நாடு சேம்பியன்ஸ் அறக்கட்டளை.*

### விளையாட்டு கட்டமைப்புகள்

*விளையாட்டில் சாதிக்கிற வீரர்களுக்கு 3 சதவிகித இட ஒதுக்கீட்டில், அரசு மற்றும் பொதுத் துறை நிறுவனங்களில் வேலைவாய்ப்பையும் நம் அரசு வழங்குகிறது. தமிழ்நாடு முழுவதும் விளையாட்டு கட்டமைப்புகளை ஏற்படுத்த, சட்டமன்றத் தொகுதிக்கு ஒரு மினி ஸ்டேடியம் கட்டி வருகிறோம். அந்த மினி ஸ்டேடியத்தில் உடற்பயிற்சிக் கூடத்துடன், கிட்டத்தட்ட 75 ஸ்டேடியம் கட்டுவதற்கான வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இப்படி பல திட்டங்களை நம் அரசு செய்கிறது. அதில் ஒரு திட்டம்தான் கலைஞர் ஸ்போர்ட்ஸ் கிட் வழங்கும் திட்டம்.*

*இன்றைக்கு ஸ்போர்ட்ஸ் கிட் வாங்கி இருக்கிற நீங்கள் ஒவ்வொருவரும் நாளைக்கு பெரிய ஸ்போர்ட்ஸ் ஸ்டார்ஸாக வருவீர்கள் என்ற நம்பிக்கை இந்த அரசுக்கு இருக்கிறது. நீங்கள் நிச்சயம் அதை செய்து காட்டுவீர்கள். இன்று நம் அரசு விளையாட்டுத் துறையில் செய்து வருகின்ற சாதனைகளால் இந்தியாவில் உள்ள பல்வேறு இடங்களில் இருந்து, நம் அரசுக்கு பாராட்டுகள் தொடர்ந்து வந்துகொண்டு இருக்கின்றன.*

### திறமை தன்னம்பிக்கை

*இரண்டு நாட்களுக்கு முன்பு டெல்லியில் நடந்த சி.ஐ.ஏ. பிசினஸ் ஸ்போர்ட்ஸ் அவார்டு - 2025 நிகழ்ச்சியில், `தி பெஸ்ட் ஸ்டேட் ஃபார் ப்ரோமோட்டிங் ஸ்போர்ட்ஸ் டெவலப்மென்ட் விருது’, அதேபோல் `பிக்கி டெர்ப் - 2024 விருது’ என்று கடந்த மூன்று வருடத்தில் மட்டும் ஆறு விருதுகள் நம் அரசுக்குக் கிடைத்துள்ளன. இதற்கெல்லாம் அரசு மட்டுமே காரணம் கிடையாது. இதற்கெல்லாம் தமிழ்நாட்டில் இருக்கின்ற விளையாட்டு வீரர்களும், வீராங்கனைகளும்தான் காரணம். அப்படிப்பட்ட பெருமைமிகு வீரர்களில் 2 பேர் உங்கள் முன்பு இந்த மேடையில் அமர்ந்திருக்கிறார்கள்.*

*புதுவண்ணாரப்பேட்டையைச் சேர்ந்த தங்கை கீர்த்தனா, வறுமையோடும், குடும்பச் சூழலோடும் போராடி தன்னுடைய திறமையால், தன்னம்பிக்கையால், இன்றைக்கு கேரம் விளையாட்டில் உலக சாம்பியனாக உயர்ந்திருக்கிறார் சகோதரி கீர்த்தனா அவர்கள்.*

*சமீபத்தில், மாலத்தீவில் நடந்த உலக கோப்பை கேரம் போட்டியில் ஒன்றையர், இரட்டையர், குழுவினர் (singles, doubles, team matches) என எல்லாவற்றிலும் தங்கப்பதக்கத்தைப் பெற்று சாதனை படைத்துள்ளார். இன்று மதியம் அவரைப் பாராட்டி, அவருக்கு உயரிய ஊக்கத்தொகையாக 1 கோடி ரூபாயை நம் அரசு வழங்கியுள்ளது. தங்கை கீர்த்தனாவுக்கு நம் அனைவரின் சார்பாக அவருக்கும், அவரின் பயிற்சியாளருக்கும், அவரின் குடும்பத்தினருக்கும் நமது பாராட்டுகளை, நம் கைத்தட்டல்கள் மூலம் தெரிவித்துக் கொள்வோம்.*

*கீர்த்தனாவைப் போல இங்கு இன்னொரு விளையாட்டு வீராங்கனை நம் முன்பு அமர்ந்திருக்கிறார்கள். ஸ்ருதி ரத்தினவேல். மதுரையில் கூடைப்பந்து விளையாடத் தொடங்கிய இவர், இப்போது சீனா வரைக்கும் சென்று இந்திய அணிக்காக விளையாடிக் கொண்டிருக்கிறார்கள்.*

### பணி ஆணை

*2025-இல் மட்டும் தேசிய அளவிலான போட்டிகளில் மொத்தம் 2 தங்கப் பதக்கம், ஒரு வெண்கலப் பதக்கத்தைப் வென்று சாதனைப் படைத்துள்ளார்கள். அதோடு, தமிழ்நாடு முதலமைச்சர் அவரை அழைத்து 3 சதவிகித இட ஒதுக்கீட்டின் அடிப்படையில் அவர்களுக்கு பணி ஆணையும் வழங்கியிருக்கிறார்.*

*இன்றைக்கு விளையாட்டு வீராங்கனை ஸ்ருதி ரத்தினவேல், டி.என்.பி.எல் (TNPL) நிறுவனத்தில் Corporate Secretarial Officer ஆக, பெருமையுடன் பணியாற்றி வருகிறார்கள். ஆகவே, உங்களில் இருந்து பல கீர்த்தனாக்கள், பல ஸ்ருதிகள் வர வேண்டும் என்பதுதான் இந்த அரசின் ஒரே ஆணை, எண்ணம். அதற்கு நம் முதலமைச்சர் அவர்களும், நானும் உங்கள் குடும்பத்தில் ஒருவராக இருந்து, உங்களுக்குத் தேவையான உதவிகளை எந்த நேரத்திலும் செய்ய தயாராக இருக்கிறோம்.*

*விளையாட்டால் உடல்நலம் - மனநலம் இரண்டுமே மேம்படும். ஆகவே, அலைபேசி பார்ப்பதைக் குறைத்துவிட்டு, இந்த ஸ்போர்ட்ஸ் கிட்டை பயன்படுத்தி நன்றாக விளையாடுங்கள். தொடந்து பல சாதனைகளை படைத்து தமிழ்நாட்டுக்கும், இந்திய ஒன்றியத்துக்கும் நீங்கள் அனைவரும் பெருமை சேர்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.*

*இந்த விளையாட்டு உபகரணங்களை பத்திரமாக வைத்துக் கொள்ளுங்கள். இதை நீங்கள் முறையாக பராமரிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.கலைஞர் ஸ்போர்ட்ஸ் கிட் பெற்ற அனைத்து விளையாட்டு வீரர்கள், தம்பிகள் - தங்கைகள் அத்தனை பேருக்கும் மீண்டும் என் வாழ்த்துகளைத் தெரிவித்து விடைபெறுகிறேன்.*

*இவ்வாறு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வாழ்த்திப் பேசினார்.*

### பங்கேற்றவர்கள்

*அமைச்சர்கள் கே.என்.நேரு, மா. சுப்பிரமணியன், பி.கே.சேகர்பாபு, சென்னை மாநகராட்சி மேயர் பிரியாராஜன், சட்டமன்ற உறுப்பினர்கள் பரந்தாமன், மாதவரம் சுதர்சனம், ஆர்.டி.சேகர், மயிலை வேலு, ஐட்ரீம்ஸ் மூர்த்தி, பிரபாகர் ராஜா, அரவிந்த் ரமேஷ், ஜோசப் சாமுவேல், வெற்றியழகன், காரபாக்கம் கணபதி, மாநகராட்சி துணை மேயர் மகேஷ்குமார், அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் அதுல்யா மிஸ்ரா ஐ.ஏ.எஸ்., மாநகராட்சி ஆணையர் குமரகுருபரன் ஐ.ஏ.எஸ்., விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் மேகநாத் ரெட்டி ஐ.ஏ.எஸ்., கேரம் வீராங்கனை கீர்த்தனா, கூடைப்பந்து வீராங்கனை ஸ்ருதி, அரசு அதிகாரிகள், அலுவலர்கள் உள்ளாட்சிப் பிரதிநிதிகள் உள்படபலரும் கலந்து கொண்டனர்.*